**தலைப்பு 007 – நீதிச் சேவை ஆணைக்குழு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 007 - நீதிச் சேவை ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நீதிச் சேவை ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பறிக்கை 2023 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 ஜுன் 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து,நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நீதிச் சேவை ஆணைக்குழுவின் நிதி நிலைமையினையும் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்

.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்கியதாகவும்,

(ஆ) கடந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்படடிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2022 திசெம்பர் 13 திகதிய இலக்கம் 2022/05 கொண்ட அரச கணக்குகள் வழிகாட்டி பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதும், அத் தேவைப்பாடுகளை விட்டு விலகிய சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 13 திகதிய இலக்கம் 2022/05 கொண்ட அரச கணக்குகள் வழிகாட்டியின் 7.5 பந்தி பிரகாரம் 2022 திசெம்பர் 31 திகதியன்று நிதி செயலாற்றுகை கூற்றின் மீதி, கட்டுநிதி இணக்க கூற்று பிரகாரம் மீதியின் மற்றும் ஆண்டிறுதியில் கட்டுநிதி மீதியின் கூட்டுத் தொகைக்கு சமமாக வேண்டிய போதும், ஏசீஏ – 3 இல் திசெம்பர் 31 திகதியன்று திறைசேரி புத்தகம் பிரகாரம் ரூபா 219,868 ஆன கட்டுநிதி மீதி நிதி செயலாற்றுகை கூற்றில் காட்டப்பட்டு இருக்காததுடன் அது நிதி நிலைமை பற்றி கூற்றில் வழியில் காசாக நிதிசார் சொத்துக்களின் கீழும், கட்டுநிதி மீதியாக நடைமுறை பொறுப்பின் கீழும் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதி செயலாற்றுகை கூற்றில் 2022 திசெம்பர் 31 திகதியன்று கணக்கு புத்தகங்களில் கட்டுநிதி மீதியொன்று இல்லாததால் அத்திகதியன்றுகட்டுநிதி மீதி காட்டப்படவில்லை. அது பற்றி ACA– 3 கட்டுநிதி கணக்கு மீதான கூற்றின் மூலம் தெளிவாக காட்டியுள்ளதாகவும், அதன் பிரகாரம் கட்டுநிதி இணக்கக் கூற்றில் மீதி ACA– 7 பிரகாரம் ரூபா 6,312,856 மற்றும் கட்டுநிதி கணக்க மீதி ACA– 3 பிரகாரம் ரூபா 0 வீதம் நிதி செயலாற்றுகை கூற்றில் மீதி அந்த இரண்டினதும் கூட்டுத் தொகை ரூபா 6,312,856 ஆக காட்டப்பட்டுள்ளதாகவும்,ரூபா 219,868 ஆன தங்களால் கட்டுநிதி மீதியாக குறிப்பிட்டுள்ள அதன் பெறுமதி 2022 திசெம்பர் 31 திகதி திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இலக்கம் 2022/05 கொண்ட அரச கணக்குகள் வழிகாட்டியின் 7.5 பந்திக்கு இணங்க நிதி செயலாற்றுகை கூற்றில் மீதியை | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் கட்டுநிதி மீதி நிதி நிலைமை மீதான கூற்றில் சரியாக காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சரியாக காட்டியுள்ளதாகவும், நிறுவனத்தின் கணக்கு புத்தகம் பிரகாரம் (ACA - 3) 2022.12.31 திகதியன்று கட்டுநிதி மீயொன்று இல்லை. கட்டுநிதி மீதியொன்று காட்டப்பட்டுள்ளது திறைசேரி கணக்குப் புத்தகம் பிரகாரமாகும். நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவது திணைக்கள புத்தகங்களின் பிரகாரமாவதால், இதனை தற்போது திறைசேரிக்கு தீர்த்துள்ளதாலும், வழியில் காசாக நடைமுடை சொத்துக்களின் கீழ் மற்றும் கட்டுநிதி மீதியாக நடைமுறை பொறுப்பின் கீழ் காட்டப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | அரச கணக்குகள் வழிகாட்டியின் 06 பந்தி பிரகாரம் அறிமுகம் செய்துள்ள காசுப் பாய்ச்சல் கூற்றின் படிவம் பிரகாரம் ஆண்டுனுள் பராதீனம் செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களின் விற்பனையால் கிடைத்த வருமானமான ரூபா 3,603,750 ஆன பெறுமதி காசுப் பாய்ச்சலில் மூலதன செயற்பாடுகளினால் உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் உரிமை அற்றும் ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்கள் விற்பனையின் கீழ் காட்டப்பட வேண்டிய போதும், அதனை செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | ஆண்டினுள் பராதீனம் செய்த வாகனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை விற்பனை செய்ததால் கிடைத்த வருமானம் தவறுதலாக அவ்வாறு காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் காட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் விற்பனையால் கிடைத்த வருமானத்தை காசுப் பாய்ச்சல் கூற்றில் சரியாக காட்ட வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

**(அ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்க கூற்று**

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவிவரும் கடமையை விட்டுச் சென்ற ஒரு அலுவலரிடமிருந்து ரூபா 185,000 ஆன கடன் மீதியொன்றை அறவிடுவது தொடர்பாக தாபன விதிக்கோவையில் XXIV ஆம் அத்தியாயத்தில் 4.5 மற்றும் 4.6 | ரூபா 185,000 கடன் மீதி காட்டப்படும் கடனாலியின் 10 ஆண்டுகளை விஞ்சியசேவை காலமொன்று இருப்பதால் பிணையாளிகளின்றி இந்த கடனை விடுவித்துள்ளதுடன் தாபன விதிகோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.6 மற்றும் அரச | கடன் மீதியை அறவிடுவதற்கு தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதி சுற்றறிக்கை இலக்கம் 05/2019 பிரகாரம்அம் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |

**(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

ஆணைக்குழுவினால் பின்வரும் பதிவேட்டை பேணியிருக்காதமை மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போதுஅவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **பிணைப் பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 891(1) பிரகாரம் 09 ஊழியர் குழுகளிற்குரிய பிணை வைக்க வேண்டிய அலவலர்கள் அத் தேவைபாட்டை நிறைவேற்றி இருக்காததுடன் குறித்த தகவல் உள்ளடக்கிய பிணை பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவிலலை. | தற்போது பிணை பதிவேடொன் று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவதானிப்புக்கக இத்துடன் சமர்ப்பிப்பதாகவும் அறிவிக்ககப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்ட தகவல்கள் உள்ளடங்களாக பிணை வைக்க வேண்டிய அலுவலர் மீதான பிணை பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய 03/2022 இலக்க கொண்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 03 (xvii) பந்தி பிரகாரம் ஆண்டினுள் செலவு மேற்கொள்வதற்காக ஒதுக்கிய ஏற்பாடுகளில் சேமிப்பு காணப்படின்அவற்றை ஆண்டு இறுதிற்கு முன்னர் ஏனைய செலவினங்களுக்காக பயன்படுத்தக்கூடாத போதும், மீண்டெழும் 02 செலவின விடயங்களில் ரூபா 4,350,000 ஆன ஏற்பாடுகள் ஏனைய செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டிருந்தன. | அலுவலக நடவடிக்கைகள் தொடர்ந்து பேணிச்செல்வதற்காக மேற்கொள்ள வேண்டிய முக்கிய செலவுகளிற்காக இவ்வாறு மீண்டெழும் செலவின விடயங்களில் எஞ்சிய ஏற்பாடுகள், திறைசேரியையும் அறிவூட்டி மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் ஏற்பாடு பயன்படுத்தப்பட வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படல்**

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
| --- | --- | --- |
| 2023 ஆண்டில் செலுத்திய 2022 ஆண்டிற்குரிய ரூபா 210,790 பெறுமதியான பொறுப்புக்கள், பொறுப்புக்கள் பதிவேட்டில் மற்றும் 2022 திசெம்பர் 31 திகதிற்கு கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் மீதான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டின் திசெம்பர் மாத தெலைபேசி பட்டியல் மற்றும் நிறுவக சுத்திகரிப்பு சேவைக்குரிய பட்டியல் செலுத்துவதற்காக 2023 ஆண்டு பாதீடு மதிப்பீட்டின் மூலம் நிதி ஒதுக்கப்படுவதால் அவை மீளாய்வாண்டு கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களாக வேறாக்கி காட்டப்படவில்லை. எவ்வாறு எனினும் அவ்வாறு நடைமுறை ஆண்டிற்குரியதாக அடுத்துவரும் ஆண்டின் கொடுப்பனவுகளை பொறுப்பு பதிவேட்டில் காட்டுவது தேவையென உங்களால் சுட்டிக்காட்டுவதாயின் எதிர்வரும் ஆண்டுகளில் அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சரியாக பொறுப்பு பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

**2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
| --- | --- | --- | --- |
| (i) | திணைக்களத்தின் நிதிக் கட்டப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டப்பாட்டு தொகுதியொன்றை தயாரித்து பேணிச்செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதி செய்ய வேண்டியதுடன் அத் தொகுதியின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் தொகுதியை பயனுறுதிமிக்கதாக பேணிச்செல்ல தேவையான மாற்றங்களை மேற்கொள்ள | அலுவலகத்தினுள் நிதி கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டப்பாட்டு முறையொன்றை இஸ்தாபிப்பதற்கான ஒவ்வொரு ஆண்டிலும் வருடம் ஆரம்பத்திலேயே எழுத்து மூலம்,கணக்காய்வு பிரிவிற்கும் பிரதியுடன் அதிகாரத்தை ஒப்படைத்தல் மேற்கொள்வதுடன், ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக அதன் ஆக்கபூர்வ தன்மை மீதான அவதானத்துடன் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியதாகவும், அம் மீளாய்வு எழுத்து மூலமாக மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கவேண்டிருந்த போதும்,அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொண்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | இருப்தாக குறிப்பிட வேண்டும். மாற்றங்களை மேற்கொள்வதற்கு தேவையான வகையில் உள்ளக கட்டுப்பட்டு தொகுதியின் ஆக்கபூர்வதன்மையில் பிரச்சினை காணப்படாததால், மீண்டும் அவ்வாறான எழுத்து மூலமான மீளாய்வொன்று மேற்கொள்ளவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ii) | வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்களை உரிய நேரத்தில் தயாரித்தல் இடம்பெறுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்பிக்க பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பேற்றக வேண்டிய போதும், அறிக்கையின் 3.1 (அ) பந்தியில் குறிப்பிடப்படும் கணக்காய்வு அவதானிப்பு காரணமாக அத்தேவைப்பாட்டை மேற்கொண்டிருக்கவில்லை. | தற்போது வருடாந்த செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

மாதிரிக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரமாகக் காட்டப்பட்டுகிறது.

| **அவதானிப்புக்கள்** | | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமை** | | |
| (i) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| 103(1) (உ) | | 2021 திசெம்பர் 09 திகதி மோடார் வண்டியொன்று சேதத்திற்கு உட்பட்டது தொடர்பாக தேச நட்ட பதிவேட்டினுள் | WP KX 6732 இலக்க மோடார் வண்டிக்குரியதான தகவல்கள் நட்டம் மற்றும் கைவிடல் கூற்றில் உள்ளடக்கவில்லை | வாகனங்களிற்கு ஏற்படும் விபத்துக்களை சேதம் மற்றும் நட்ட பதிவேட்டில் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கி இருக்காததுடன், 2022 ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்பிக்கப்படுகின்ற நட்டம் மற்றும் கைவிடல் தொடர்பான கூற்றில் அறவிடல் மற்றும் புத்தகங்களிலிருந்து பதிவழித்தல் கூற்றிலும் உள்ளடக்கி இருக்கவில்லை. | ல என அறவிக்கப்பட்டு இருந்தது. | நிதிக்கூற்றுக்களில் நட்டம் மற்றும் கைவிடல் தொடர்பான கூற்றில் மற்றும் புத்தகங்களில் இருந்து பதிவழிக்கும் கூற்றிலும் குறிப்பிட வேண்டும். |
| 104(1)(அ) | மோடார் வாகனத்திற்கு ஏற்பட்ட சேதம் தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் நடடிக்கை எடுத்திருக்கவில்லை. | KX 6732 இலக்க மோடார் வண்டிக்கு இரவு நேரத்தில் பிராணியொன்று வருடியதான் காரணமாக சேதமொன்று ஏற்பட்டதுடன் அது தொடர்பாக குறித்த காப்புறுதி கம்பனிக்கு அறிவித்ததாகவும, காப்புறுதி கம்பனி வண்டியை பரிசோதித்த பின்னர் குறித்த மோடார் வண்டியின் திருத்த வேலைகளை மேற்கொள்ள சேவை வழங்கும் நிறுவனத்திற்கு சமர்பித்ததாக அறிவித்திருந்தது. மோடார் வண்டிற்குரிய காப்புறுதி கம்பனியினால் ரூபா 63,209 ஆன தொகையை சேவை வழங்கிய நிறுவனத்திற்கு வழங்கியிருந்ததாகவும், காப்புறுதிக் கம்பனி மீளிநிரப்பிய தொகைக்கு மேலதிமாக செலுத்த நேரிட்ட | வாகன விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ரூபா 2,941 தொகையை ஆணைக்குழுவினால் செலுத்தியதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. | |
| | 1646 | நிதிப் பிரமாணம் பிரகாரம் 05 வாகனங்கள் தொடர்பாக ஓட்டக் குறிப்பு மற்றும் மாதாந்த பொழிப்பின் மூலப் பிரதி கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | தற்போது வாகன ஓட்டக் குறிப்பு மாதாந்த பொழிபின் மூலப் பிரதி உரிய தினங்களில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. | வாகனம் தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| | 2008 பெப்ரவரி 06 திகதிய மற்றும் 2018 சனவரி 24 திகதிய இலக்கம் 05/2008 மற்றும் இலக்கம் 05/2008 (i) சுற்றறிக்கை | சுற்றறிக்கை பிரகாரம் பொதுத் துறையின் செயற்பாடுகளை மிக்க வினைத்திறனாக மேற்கொள்ள மற்றும் அதற்காக தொடர்புபடும் தரப்பினர்களிற்கிடையில் மிகப் புரிந்துனர்வு மற்றும் ஒவ்வொருவரிற்கு இடையில் நம்பிக்கையை மேம்படுத்த பிரஜைகள்/ சேவைபெறுனர் பிரகடனத்தை அறிமுகம் செய்வது ஒவ்வொறு அரச நிறுவனங்களினாலும் மேற்கொள்ள வேண்டிய போதும், திணைக்களத்தில் இது வரைபிரஜைகள்/ சேவைபெறுனர் பிரகடனத்தை | இலக்கம் 05/2008 மற்றும் இலக்கம் 05/2008 (i) பொது நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் பிரஜைகள்/ சேவைபெறுனர் பிரகடனத்தை தயாரிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறிமுகம் செய்திருக்கவில்லை. | | |
| 2016 திசெம்பர் 31 திகதிய இலக்கம் 30/2016 கொண்ட சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சுற்றறிக்கை பிரகாரம்05 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பாவனை பற்றிய பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | நாடடில் நிலவிய தட்டுப்பாடு காரணமாக QR குறியீட்டின் மூலம் வாரத்திற்கு 20 லீற்றர்கள் அளவு மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் அளவொன்று ஒரு வாகனத்திற்று வழங்கப்பட்டதால் பொ.நி.சு 30/2016 சுற்றறிக்கை பிரகாரம் 2022 ஆண்டில் எரிபொருள் பற்றிய பரிசோதனையை மேற்கொள்ள முடியாது போனதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. | எரிபொருள் பாவனை தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.5 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட பொது நிதி சுற்றறிக்கை மற்றும் திருத்திய நிதிப் பிரமாணம் 371 (2) பிரகாரம் ஏதேனும் விஷேட பணிக்காக பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் உப கட்டுநிதியை 10 நாட்களுக்குள் மீண்டும் தீர்க்க வேண்டிய போதும், ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கிய ரூபா 100,000 ஆன முற்பணம் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உப கட்டுநிதிக்கிடையில் நாட்டில் எரிபொருள் பிரச்சினையுடன் நிலவிய சூழ்நிலை மற்றும் நீண்ட புத்தாண்டு விடுமுறையின் முன் ரூபா 100,000 ஆன உப கட்டுநிதியை தீர்த்துள்ளதுடன் ரூபா 2,000 மற்றும் ரூபா 40,000 ஆன எனைய இரண்டு உப கட்டுநிதி பணி முடிவடைந்தவுடனே நி.பி 371(2) பிரகாரம் தீர்த்துள்ளதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. | சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் பிரகாரம் நிமித்த உப கட்டுநிதியை கால தாமதமின்றி தீர்க்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 2/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 10.2 பந்தி பிரகாரம் பொது நிதி திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்படும் படிவம் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை தயாரிக்க வேண்டியதாக இருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 02/2020 கொண்ட சுற்றறிக்கையின் 12.1 பந்தி மற்றும் 2022 மே 26 திகதிய PFD/RED/REG/02/CC/2022 நிதி அமைச்சின் கடிதம் பிரகாரம் 2021 ஆண்டில் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்பிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்ததது. | சுற்றறிக்கை பிரகாரம் செயலாற்றுகை அறிக்கையை உரிய திகதியில் சமர்பிக்கவேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 02/2020 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் 10.2 பந்தி பிரகாரம ˙2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சமர்பிக்க வேண்டிய வருடாந்த செயலாற்றுகை அறிகிகையை நிதிக்கூற்றுக்களுடன் சமர்பித்திருக்கவில்லை. | மொத்த நீதிமன்றத் தொகுதிக்கும் உரிய மற்றும் நீதிமன்றங்களின் தனித்துவம் தொடர்பில் நேரடியாக தாக்கம் செலுத்தும் விடயங்கள் உள்ளடங்குவதால் பதிப்பிற்குரிய சட்டமா அதிபரின் இலக்கம் AG/28/2016 மற்றும் 2016.09.27 திகதிய கடிதம் பிரகாரம் எங்களது செயலாற்றுகை அறிக்கையை நிதிக்கூற்றுக்களுடன் சமர்பிக்க முடியாதுள்ளதாகஅறிவிக்கப்பட்டிருந்ததது. | சுற்றறிக்கை பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை சமர்பிக்கவேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்.

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 27 திகதிய இலக்கம் MSDW/08/65 கொண்ட நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட கடிதம் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளக் கூடியவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதனை ஒருங்கிணைக்க அலுவலர்களை நியமித்து நிலைபேறான அபிவிருத்தி வேலைத் திட்டத்தை தயாரிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்ததது. | நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட கடிதம் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி வேலைத் திட்டத்தை தயாரிக்க வேண்டும் |

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நீதிச் சேவை ஆணைக்குழுவின், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்றை நிறுவுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்காததுடன்,உள்ளககக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு அலகொன்றை நிறுவுவதற்கு போதிய இடவசதி இல்லாத காரணத்தால் உள்ளக கணக்காய்வு அலகொன்றை நிறுவியில்லாததுடன் உள்ளக கணக்காய்வு அலகொன்று இல்லாத போதும், எவ்வித நிதி/ வளங்கள் வீன்விரயமின்றி தாபன விதிக்கோவை, நிதிப் பிரமாணம் மற்றும் உரிய சுற்றறிக்கைகள் பிரகாரம் செயற்பட்டு, அறிவுறுட்பத்துடன் பொது நிதியை முகாதைத்துவம் செய்து நிறுவனத்தினுள் மிக உயர் மட்டத்தில் நிதி ஒழுங்கை பேணிச் செல்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | தேசிய கணக்காய்வு சட்டத்தின் மற்றும் நிதிப் பிரமானம் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அலகொன்றை நிறுவிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 6. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியன்று ஆணைக்குழுவின் அங்கீகார ஆளணி 117 ஆன போதும், திசெம்பர் 31 திகதிளவில் சிரேஷ்ட மட்டத்தில் 09 பதவிகளில், மூன்றாம் மட்டத்தில் 03 பதவிகளில், இரண்டாம் மட்டத்தில் 31 பதவிகளில் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 15 பதவிகளில் பற்றாக்குறை நிலவின. | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 117 ஆன போதும், 63 அலுவலர்கலான குறைந்தபட்ச எண்ணிக்கையுடன் நீதிச் சேவை ஆணைக்குழுவின் கட்டளை பிரகாரம் மொத்த நீதித்துறைசார் தொகுதியின் மேற்பார்வை, இயக்குதல் மற்றும் நிர்வாகத்திற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் இந்த செயலகத்தினால் உரியவாறு நடாத்திச் செல்லப்படுகின்றது. குறைந்தபட்ச எண்ணிக்கையினர் கடமையாற்றிய போதும் உரிய முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் காரணமாக அனைத்து கடமை பணிகளையும் தொடர்ச்சியாக மேற்கொண்டு செல்வதுடன் பொது நிதியை உச்ச வினைத்திறனாக, ஆக்கபூர்வமாக, அறிவுநுட்பமான நிதிக் கட்டுப்பாட்டுடன் பயன்படுத்தியுள்ளதாகவும் இறுதியாக சுட்டிக் காட்டுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | விரைவில் வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலக்கம் 02/2018 மற்றும் 2018 சனவரி 24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கையின் 01 பந்தி பிரகாரம் மொத்த ஆளணிக்குமான செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திடல் 2018 ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதும், இது வரை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்காததுடன் சுற்றறிக்கையின் 04 பந்தி பிரகாரம் மனிதவள அபிவிருத்தித் திட்டமொன்று ஆணைக்குழுவினால தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை | தற்போது நீதித்துறை ஆளணிக்காக வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திட்டு, மனிதவள அபிவிருத்தி திட்டமொன்றை தயாரிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் மனிதவள திட்டமொன்றை தயாரித்தல் மற்றும் வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திட வேண்டும். |